தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25-10-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## விவசாயிகளின் தேவைக்கேற்ற ஆராய்ச்சிகள் தேவை கூறுகிறார் துணைவேந்தர்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகரில் 24-10-2014 வெள்ளிக்கிழமை அன்று மேற்கு மண்டல ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க ஆலோசனைக் குழு (RREAC) கூட்டம் நடைபெற்றது.

முனைவர் மா. மகேஸ்வரன், ஆராய்ச்சி இயக்குநர் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றும்பொழுது, புதிய இரகங்கள், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் தரமான விதைகளின் பயன்பாட்டினை வலியுறுத்தினார். இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமான ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் தேவைகளை அறிதல் குறித்து பல்கலைக்கழக உயர் அதிகாரிகள், வேளாண் விஞ்ஞானிகள், வேளாண் மற்றும் சகோதரத்துறை அதிகாரிகள், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க ஆலோசனைக்குழு விவசாய உறுப்பினர்களிடையே கலந்துரையாடல் நடைபெற்றது.

முனைவர் கா.அ. பொன்னுசாமி, விரிவாக்க கல்வி இயக்குநர் அவர்கள் சிறப்புரையின் பொழுது, வரும் காலத்தில் வயல்வெளி ஆராய்ச்சித் திட்டங்கள் அதிகப்படுத்தப்படும் என்றுரைத்தார். மேலும், உழவர் விவாதக்குழு கூட்டமைப்பு, மாதிரிப்பண்ணைகள் அமைக்கப்படும் என்றார். பாரம்பரிய வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக பழங்காலக் கருவிகள் மற்றும் வேளாண் யுக்திகள் கேட்டறியப்பட்டு, வேளாண் உற்பத்தி மட்டுமல்லாது, மதிப்புக்கூட்டல் மற்றும் சந்தைப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் எனக் கூறினார்.

இக்கூட்டத்தில் தலைமையுரையாற்றிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் குழுத்தலைவர் முனைவர். கு.இராமசாமி அவர்கள் விளைநிலத்தின் அளவு மற்றும் நீர் வளம் குறுகிக் கொண்டே வரும் நிலையில் விதையிலிருந்து அறுவடை வரை இயந்திரமயமாதலின் அவசியத்தை எடுத்துரைத்தார். மேலும், விஞ்ஞானிகள், விவசாயிகளின் தேவைகளை அறிந்து ஆராய்ச்சி மேற்கொண்டு வேளாண் உற்பத்தியை அதிகப்படுத்த முனைப்புடன் செயல்படவேண்டும் என்றுரைத்தார்.

வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் முனைவர். வெ.கி. துரைசாமி அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே முடிவடைந்தது.

மக்கள் தொடர்பு அலுவலர்